தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1984, மார்ச் 24, சனிக்கிழமை.

பங்குனி 11, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.

இந்தத் தொழிலை இக் கருவியால் இன்னவன் முடிப்பான் என்று ஆராய்ந்து பிறகு அத் தொழிலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் மூலம் விற்பனை செய்யப்படும் பால்.

427—*வினா எண் 19755)—திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் பால் கலப்படம் இல்லாமல் விற்பனை செய்யப்படுவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் விற்பனை செய்யும் பாலின் தரத்தை சோதனையிட பல்வேறு அதிகாரிகளால் திடீர் சோதனைகள் நடத்தப்படுகின்றன. இதற்காக இந்நிறுவனத்தில், காவல் துறை கண்காணிப்பாளர் தலைமையில் கண்காணிப்பு பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கண்காணிப்பு பிரிவு அல்லாமல் விற்பனை பிரிவு அதிகாரிகளாலும், தரக்கட்டுப்பாடு குழு மூலமாகவும் திடீர் சோதனைகள் நடத்தப்பட்டு பாலில் கலப்படம் செய்த நபர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கலப்படம் செய்வதைத் தடுப்பதற்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். இந்தப் பால்வள நிறுவனத்தின் மூலம் விநியோகம் செய்யப்

படும் பாலில் பால் பவுடரின் ஒரு பகுதியைக் கரைத்து அதோடு சேர்த்து விநியோகிக்கப்படுகிறது என்ற பேச்சு மக்களிடையே பரவலாக வந்துள்ளது. அது உண்மையா ? அப்படியானால் எந்த அளவு பால் பவுடரை அதில் சேர்க்கிறார்கள் என்பதை அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது உண்மை. பாலில் பால் பவுடர் கலக்கப்படுகின்றது. இன்றைக்கு விநியோகம் செய்யப்படுகின்ற பாலில் 4.5 சதவீதம் ஃபாட்fat மட்டுமே இருக்கிறது. மற்றவை எல்லாம் பால் பவுடர்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் பாலில் எவ்வளவு பவுடர் கலக்கப்படுகிறது என்ற விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இன்னொரு தகவலையும் அவரிடமிருந்து நான் அறிய விரும்புகிறேன். பாலில் பவுடர் கலக்கிறபொழுது பால் குளிரூட்டும் இடங்களில் பால் சப்ளை செய்கிற சிறு விவசாயிகளுக்குத் தராதரம் பிரித்து எடையினுடைய அடிப்படையில் காசு கொடுக்கப்படுகிறதே, அதை மாற்றி, ஒரே நிலையில் பணம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் கொள்முதல் செய்கிற பொழுது பாலினுடைய கொழுப்புச் சத்தின் அடிப்படையில் விலை கொடுக்கப்படுகிறது. விற்கின்ற பொழுது 4.5 சதவீதம் கொழுப்பு என்று அதற்குரிய வகையில் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலில் கலப்படம் செய்வது பெரிய பாவம். ஆனால் பாலில் கலப்படம் செய்பவர்களை நாம் வளர்த்துக் கொண்டிருந்தாலும், ரூ. 1,000 சம்பாதித்தால் ரூ. 25 கோர்ட்டிலே பைன் கட்டிவிட்டு தப்பித்து விடுகிறார்கள். ஆகவே, பாலில் கலப்படம் செய்பவர்கள் எந்தவித விசாரணையும் இல்லாமல் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாலில் வேறு எதுவும் கலக்க முடியாது. தண்ணீர்தான் கலக்க முடியும். அதற்கு ஏன் இவ்வளவு பெரிய தண்டனை ?

திரு. இரா. தாமரைக்கனி : பாலில் தண்ணீர் கலந்து விற்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது தப்பில்லை. அதற்கு இவ்வளவு பெரிய தண்டனை கொடுக்க முடியாது.

1984 மார்ச் 24]

திரு. இரா. தாமரைக்கனி : சென்னை, திருச்சி, மதுரை போன்ற இடங்களில் பாதுகாக்கப்பட்ட பால் கிடைக்கிறது. ஆனால், கிராமப் புறங்களில் பாதுகாக்கப்பட்ட பால் கிடைக்க வில்லை. அதற்கு அரசு ஆவன செய்யுமா? என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் மெள்ள, மெள்ள இப்பொழுது விரிவு படுத்தப்பட்டு வருகிறது.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நமது புரட்சித் தலைவர் அரசு மிக அதிக அளவில் ஆங்காங்கு பால் பவுடர் உற்பத்தி தொழிற்சாலைகளை நிறுவுகிற காரணத்தால், அவற்றிற்கே தேவையான பால் கிடைக் காத காரணத்தால், தனியார் மிக அதிக அளவில் தண்ணீர் கலந்து விற்பனை செய்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்டவர் களைக் கொஞ்சம், கொஞ்சமாகத் தடைசெய்து, அந்த நிறுவனமே தேவையான பால் தயாரிக்கும் வாய்ப்பை உருவாக்க ஏதேனும் வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் மூலமாகவே அதிக அளவு பால் உற்பத்தி செய்ய போதிய அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கால்நடைத் தீவனங்களை நியாயவிலைக் கடைகளின் மூலம் விற்பனை செய்யும் திட்டம்.

428—(* வினா எண் 20512)—திரு. சி. கணேசன் : மாண்பு மிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைத் தீவனங்களை நியாய விலைக் கடைகளின் மூலம் வழங்கும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. கணேசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கால்நடை தீவனங்களை நியாய விலைக்கடைகளின் மூலம் கொடுப்பதில்லையென்று சொன் னார்கள். இப்போது கொடுக்கப்படுகிற தீவனங்கள் வாரந்தோறும் கொடுக்கப்படுகிறதா ? அல்லது மாதந்தோறும் கொடுக்கப் படுகிறதா ? அப்படி கொடுக்கிற நேரத்தில் நம்முடைய அரசு சலுகை விலையில் கொடுக்கிறார்கள். அப்படி கொடுப்ப தால் அரசிற்கு ஏற்படுகிற நஷ்டம் எவ்வளவு என்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?